**அரசின் இறைத் தொழிற்பாடுகள்**

1981 இல் அரசின் இறைத் தொழிற்பாடுகள் வரவு-செலவுத் திட்டமுகாமையை முன்னேற்றுவதனை மையமாகக்கொண்டிருந்தன. ஏற்கத்தகாத விரிவுத் தாக்கத்தினைக்கொண்ட இறைக்கொள்கையானது பொருளாதாரத்தின் பண வீக்கத் தாக்கத்தினை அதிகரித்து, புதிய பொருளாதாரக் கொள்கைகளின் நன்மைகளை இல்லாமல் செய்துவிடும் என்ற உண்மையினைக் கருத்தில் கொண்டு, அரசினால் பெறப்படக்கூடிய மூலவளங்களின் மட்டத்தினை மட்டுப் படுத்தும் இறைச் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன. 1980 இன் இறைத் தொழிற்பாடுகளினால் உருவாக்கப்பட்ட சமனற்ற தன்மைக்குப் பின் சாதுரியமான கேள்வி முகாமைக் கொள்கைகள் அரசின் செலவினைக் குறைக்கும்படி நிர்ப்பந்தித்தன. 1981 இன் வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்ட நேரத்திலும் 25 சதவீத செலவின வெட்டு நடைமுறைப் படுத்தப்பட்டது. இத்துடன் இறையாண்டின்போதும் நடைமுறைச் செலவு மூல தனச் செலவு இரண்டும் மேலும் குறைக்கப்பட்டன. இது நடைமுறைச் செலவில் 3 சதவீதக் குறைப்பினையும் மூலதனச் செலவில் 10 சதவீதக் குறைப்பினையும் உள்ளடக்கியிருந்தது. செயற்பட்டுவரும் செயற்றிட்டங்களும் எடுத்துரைக்கப்பட்ட செயற்றிட்டங்களும் மீள வரையப்பட்டன. மறுபுறம் அரசின் அரசிறையை உயர்த்தும் முயற்சிகளும் தளர்த்தப்படவில்லை. முன்னேற்றகரமான வரவு-செலவுத் திட்ட முகாமை காரணமாக அரசு வங்கித்தொழில் அமைப்பினை நாடுதல் கணிசமான அளவு அதாவது 1980 உடன் ஒப்பிடுகையில் 40 சதவீதமான அளவால் குறைக்கப்பட்டது.

இவ்வாண்டின் இறை நிலைமைகள் வழமையான ரீதியில் மிகவும் உயர்வாக இருந்த போதிலும் இவ்வாண்டின் செயலாற்றம் முந்திய ஆண்டினுடன் ஒப்பிடுகையில் சாதகமான போக்கினைக்கொண்டிருந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நோக்குகையில் வரவு-செலவுத்திட்டக் குறை 24 சதவீதத்திலிருந்து 17 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. முழுமையான அளவில் இக்குறை ரூ. 162,740 இலட்சத்திலிருந்து ரூ. 148,730 இலட்சமாக குறைவடைந்தது. வரவு-செலவுத்திட்டத்தின் நடைமுறைக்கணக்கு மேலும் ரூ. 13,820 இலட்சம் கொண்ட குறையைக் காட்டியது. எவ்வாறாயினும் இது முந்திய ஆண்டினைவிடக் கணிசமான அளவு குறைவானதாகும். அரசின் மொத்தச் செலவினத்தின் வளர்ச்சி 1980இன் 41 சதவீதத்திற்கெதிராக 3 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது. அரசின் மொத்த செலவு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 46 சதவீதத்திலிருந்து 36 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. சாதகமான இறை அபிவிருத்திகள் முக்கியமாக மூல தனக்கணக்கிலும் ஓரளவிற்கு முற்பணக் கணக்குகளின் தொழிற்பாடுகளிலும் காணப்பட்டன.

அரசின் மொத்த அரசிறை வரவுகள் 1981 இல் ரூ. 162,280 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டின் 11 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 15 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தன. கடந்த காலத்தில்போன்று முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகள் நீங்கலான மொத்த நடைமுறைச் செலவினைவிட மொத்த அரசிறை வரவுகள் கூடுதலாக விளங்கின. எனினும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமான மொத்த அரசிறை 21 சதவீதத்திலிருந்து இரண்டு சதவீதப் புள்ளிகளால் வீழ்ச்சியடைந்து 1981 இல் 19 சதவீதமாக விளங்கியது.

## அட்டவணை 1.34

## அரசின் இறைத்தொழிற்பாடுகள் 1978 - 1982

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயம் | 1978 | 1979 | 1980 | 1981 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 1981 தற்காலிக மானவை | 1982 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|
| 1. அரசிறை (அ) ... | 11,688 | 12,730 | 14,068 | 15,550 | 16,228 | 19,319 |
| 2. மீண்டெழும் செலவு ... | 10,408 | 11,502 | 13,249 | 15,332 | 15,887 | 20,664 |
| 3. முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகள் (குறை—மிகை+) ... | —1,831 | -1,028 | -3,240 | + 675 | — 1,723 | + 100 |
| 4. நடைமுறைக் கணக்கு (மிகை+/குறை—) ... | —551 | + 200 | -24,21 | + 893 | — 1,382 | — 1,245 |
| 5. மூலதனச் செலவு ... | 6,614 | 8,991 | 13,854 | 12,739 | 13,491 | 19,915 |
| அதில் கடன் கரைப்பு நிதிய, கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளும் பண்ணுட்டு நிதி நிறுவனங்களுக்கான உதவு தொகைகள் | (ஆ) (1,165) | (ஆ) (1,182) | (ஆ) (1,502) | (1,620) | (ஆ) (1,608) | (2,806) |
| 6. வரவு செலவுத் திட்டக்குறை .. | 7,165 | 8,791 | 16,274 | 11,846 | 14,873 | 21,160 |
| 7. குறையை நிதியிடல் | | | | | | |
| 7-1 உள்நாட்டு மூலங்கள் .. | 2,653 | 4,582 | 9,610 | 3,750 | 6,622 | 6,970 |
| (அ) வங்கியல்லா சந்தைக் கடன்பாடுகள்... | 2,033 | 2,806 | 2,700 | 3,750 | 2,379 | 4,000 |
| (ஆ) சந்தையல்லாக் கடன்பாடுகள் | 453 | 1,096 | -216 | — | 326 | — |
| (இ) வங்கித் தொழில் முறை (இ) | 167(ஈ) | 680(ஈ) | 7,126(ஈ) | — | 3,917(ஈ) | 2,970 |
| 7-2 வெளிநாட்டு நிதி . | 4,454 | 4,237 | 6,735 | 8,100 | 8,290 | 14,190 |
| (அ) பண்டக் கடன்கள் .. | 1,359 | 1,415 | 1,431 | | 1,722 | |
| (ஆ) செயற்றிட்ட கடன்கள் ... | 1,645 | 830 | 1,171 | | 2,064 | |
| (இ) நன்கொடைகள் .. | 661 | 1,390 | 2,620 | 8,100 | 2,803 | 14,190 |
| (ஈ) ஏனைய கடன்கள் .. | 789 | 602 | 1,513 | | 1,701 | |
| 7-3 பண நிலுவைகளின் பயன்பாடு | 58 | -28 | -72 | — 4 | 38 | — |
| 8. அரச இறைத் தொழிற்பாடுகளின் விரிவுத் தாக்கம் ... | 173 | 634 | 7,029 | — 4 | 3,847 | 2,970 |

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி.
திறைசேரி.

(அ) வெளிநாட்டு நன்கொடைகளின் கீழ் காட்டப்பட்ட வருவாயில் மூலதன நன்கொடைகள் தவிர்ந்து

(ஆ) 1978இன் ரூ. 1740 இலடசம், 1979இன் ரூ. 1780 இலட்சம், 1980இன் ரூ. 2710 இலட்சம், 1981இன் ரூ. 370 இலட்சம் கொண்ட வெளிநாட்டு நிருவாக கடன்பாடுகளின் மீளளிப்புக்களையும் உள்ளடக்கும்.

(இ) பன்னுட்டு நிதி நிறுவனங்களுக்கான உதவு தொகைகளை நிறைவேற்ற மத்திய வங்கியிலிருந்தான சிறப்பு முற்பணங்களையும் உள்ளடக்கும்.

(ஈ) வங்கித்துறையுடனான ரூபாக் கடன்களின் மீளளிப்புக்களான 1978இல் ரூ. 520 இலட்சங்கள்' 1979இல் ரூ. 180 இலட்சங்கள், 1980இல் 250 இலட்சங்கள், 1981இல் 320 இலட்சம் ஆகியவற்றிற்கு சீராக்கஞ் செய்யப்படவில்லை.

இவ்வாண்டின்போது முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகள் நீங்கலான நடைமுறைச் செலவு ரூ. 158,870 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டினைவிட 20 சதவீத அதிகரிப்பை பதிவுசெய்தது. எனினும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நடைமுறைச் செலவின் பங்கு 1980 இன் 20 சதவீதத்திலிருந்து 19 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. கடன்கரைப்பு நிதிய உதவுதொகைகளையும் படுகடன் மீளக் கொடுப்பனவையும் உள்ளடக்கிய மூலதனச் செலவு ரூ. 134,910 இலட்சமாக விளங்கி முந்திய ஆண்டின் 54 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 3 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மூலதனச் செலவின் பங்கு 16 சதவீதத்திலிருந்து 13 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.


முற்பணக் கணக்குகளின் தொழிற்பாடுகள் வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட ரூ. 6,750 இலட்சம் கொண்ட உள் வருகைக்கு எதிராக ரூ. 17,230 இலட்சம் கொண்ட வெளிக்கொடுப்பனவில் முடிவடைந்தன. ரூ. 13,820 இலட்சம் கொண்ட நடைமுறைக் கணக்குக் குறையும், ரூ. 134,910 இலட்சம் கொண்ட மூலதனச் செலவும் சேர்ந்து மொத்த வரவு செலவுத் திட்டக் குறை ரூ. 148,730 இலட்சமாக அமைந்தது.

ரூ. 148,730 இலட்சம் கொண்ட குறையானது உள்நாட்டு வெளிநாட்டுத் துறைகள் இரண்டிலுமிருந்து பெறப்பட்ட மூலவளங்களினால் நிதியிடப்பட்டது. உள்நாட்டுத்துறை 44 சதவீதத்தினை நிதியிட மீதியான 56 சதவீதமும் வெளிநாட்டு மூலவளங்களினால் நிதியிடப்பட்டது. ரூ. 81,000 இலட்சத்திற்கு வெளிநாட்டு நிதியிடல் திட்டமிடப்பட்டிருந்த இலக்கிற்கு மாறாக ரூ. 82,900 இலட்சம் வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்டது. இது ரூ. 15,180 இலட்சம் கொண்டவர்த்தகக்கடன்பாடுகளையும் உள்ளடக்கியிருந்தது. செயற்றிட்ட பண்டக் கடன்கள் முறையே ரூ. 20,640 இலட்சமாகவும் ரூ. 17,220 இலட்சமாகவும் அமைந்த வேளையில் நன்கொடைகள் ரூ. 28,030 இலட்சமாக அமைந்தன.

உள்நாட்டுக் கடன்பாடுகளைப் பொறுத்த வரை வங்கியல்லாச் சந்தைக் கடன் பாடுகள் மட்டுமே முக்கிய பணவீக்கமற்ற நிதியிடல் மூலமாக விளங்கின. ரூபாக் கடன்களின் வடிவிலானநேரடிக்கட்டுப்பாட்டிற்குட்பட்ட வங்கில்லாச் சந்தை மூலங்களிலிருந்து இருந்த மூலவளம் ரூ. 37,500 இலட்சம் கொண்ட எதிர்ப்பார்க்கப் பட்ட இலக்கிற்கு மாறாக ரூ. 23,790 இலட்சமாக அமைந்தது. ரூபாய் கடன்கள் நீக்கலான நேரடிக்கட்டுப்பாட்டிற்குட்பட்ட துறையின் சேமிப்புகள் ஏனைய முதலீடுகளில் மாறிச் சென்றமையும் தேசிய சேமிப்பு வங்கியுடனான சேமிப்புகளின் வளர்ச்சி வீத அதிகரிப்புக் குறைவடைந்து சென்றமையும் இம் மூலங்களிலிருந்து பெறப்பட்ட நிதியிடலில் பெருமளவுவீழ்ச்சி ஏற்படுவதற்கு முக்கிய பொறுப்பாயமைந்தன. இம் மூலங்களிலிருந்தான நிதியிடல் போதுமானதாக அமையாமையால் அரசுநிதி வளங்களைப் பெறுவதற்கு வங்கித் துறையினை நாடவேண்டி ஏற்பட்டது. இதற்கு உதவும் பொருட்டு திறைச்சேரி உண்டியல்களின் உச்ச அளவு ரூ, 10,000 இலட்சங்களிலிருந்து ரூ. 18,000 இலட்சமாக உயர்த்தப்பட்டது. 1981இல் ரூ. 3,9170 இலட்சம் வங்கித் தொழில் அமைப்பிலிருந்து பெறப்பட்டது. தற்போது வங்கித்தொழில் அமைப்பிடமுள்ள ரூ. 320 இலட்சம் கொண்ட ரூபாய்க் கடன்களின் மீட்புடன் அரசின் இறைத் தொழிற்பாடுகளின் விரிவுத்தாக்கம் இவ்வாண்டில் ரூ. 38,470 இலட்சமாக அமைந்தது. இது 1980 இன் ரூ. 70,290 இலட்சத்துடன் ஒப்பிடத்தக்கது. இது மொத்த வரவு செலவுத் திட்டக் குறையில் 26 சதவீதமாக அமைந்ததுடன் மொ உ உ இல் 5 சதவீதத்திற்குச் சமமாகவும் காணப்பட்டது. முந்திய ஆண்டில் இவை முறையே 43 சதவீதமாகவும், 11 சதவீதமாகவும் அமைந்திருந்தன.

# அரசிறையும் செலவும்

## நிதியாண்டுகளின்படி தரவுகள் *




இலங்கை மத்தியவங்கி.

*1971/72* ஆம் நிதியாண்டுக்குரிய தரவுகள் *1971* ஒற்றோபர் தொடக்கம் 1972 திசெம்பர் *31* வரையுள்ள *15* மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்கும் *1973* ஆண்டிற்குரிய தரவுகள் *1973* திசெம்பர் *31* வரையுள்ள காலப்பகுதிக்கும் உரியனவாகும். **1981 இற்கான எண் தொகைகள் தற்காலிகமானவை.**

1981 ஆம் ஆண்டிற்கான இறைத் தொழிற்பாடுகளின் தொகுப்பு அட்டவணை1. 34இல் தரப்பட்டுள்ளது. 1981ஆம் ஆண்டிற்குரிய அரச இறைத் தொழிற்பாடுகளின் பேரிலான தேறிய பணக்குறை கடந்த 10 ஆண்டுகளின் ஒப்பிடற்தக்க தரவுகளுடன் புள்ளி விபரப் பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ளது.

அரசிறை

1981இன் மொத்த அரசிறை வரவுகள் ரூ. 162,280 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டினைவிட ரூ.21,600 இலட்சம் அல்லது 15சதவீத அதிகரிப்பைக் காட்டின. இவ்வதிகரிப்பில் அரைப்பங்கு வியாபார மொத்த வரிகளிலிருந்து கிடைத்த உயர்ந்தளவான வரவுகளால் ஏற்பட்டது. மொத்த விற்பனவுவரிச் சேகரிப்புக்கள் ரூ. 28,290 இலட்சமாக அமைந்து 73 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தன. உயர்ந்த மட்டத்திலான பொருளாதார நடவடிக்கைகள் அதிகரித்த விலைமட்டம் என்பவற்றிலிருந்து எழும் அதிகரித்த வரவுகளும் 1981 வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட அதிகரித்த வீதங்களும் இக்கணிசமான அதிகரிப்பிற்கு வகைகூறின. 1981இன் இறுதிக் காலத்தின் போது பெருமளவான இறக்குமதிகளை உள்ளடக்கியமையும் சிறிய அளவிற்கு இவ்வதிகரிப்பிற்கு உதவியது. 1981இல் அரசிறையின் மற்றைய முக்கிய அதிகரிப்பு வரியில்லாத வருவாய்களில் ஏற்பட்டது. இவை ரூ .4,720 இலட்சத்தினால் அதிகரித்து 30சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தன. இறக்குமதித் தீர்வைகள் தேர்ந்த விற்பனவுகள் மீதான வரிகள், வருமான வரிகள் என்பனவற்றின் சேகரிப்புக்களும் அதிகரித்துக் காணப்பட்டன.

ரூ. 141,950 இலட்சமாக அமைந்து 14சத வீத அதிகரிப்பினைப் பதிவு செய்த மொத்த வரி வருவாய் மொத்த அரசிறை வரவுகளில் சென்ற ஆண்டின் 89சத வீதம் கொண்ட பங்கிற்கு எதிராக இவ்வாண்டின் 87 சதவீதமாக அமைந்தது. இதன் பங்கில் ஏற்பட்ட சிறிதளவான வீதம் வரியல்லாத வருவாயுடன் ஒப்பிடுகையில் வரி வருவாயில் ஏற்பட்ட வளர்ச்சி வீதம் குறைவாயிருந்தமையால் ஏற்பட்டதாகும். வரியல்லாத வருவாயில் வரி வீதங்கள் கட்டணங்கள் என்பன உயர்த்தப்பட்டதனால் உயர்ந்த வீதத்தில் அதிகரித்திருந்து. வரி வருவாய் பகுப்பில் வரவுகளின் முக்கிய மூலமாக நேரில் வரிகள் விளங்கின. இவை ரூ. 121,060 இலட்சமாக விளங்கி மொத்த வரி அரசிறையில் 85சதவீதமாகவும் மொத்த அரசிறை வரவுகளில் 75சத வீதமாகவும் அமைந்தன. உற்பத்தி செலவினம் மீதான நேரில்வரி வரவுகளில் ஏற்பட்ட முழுவாரியான அதிகரிப்பு ரூ. 17,340 இலட்சமாக அல்லது முந்திய ஆண்டின் 6சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 17சதவீதமாக விளங்கியது. மறுபுறம் நேர் வரி வரவுகள் ரூ. 20,900 இலட்சமாக அமைந்து மொத்தவரி வருவாயில் 15சதவீதத்திற்கும் மொத்த அரசிறையில் 13சத வீதத்திற்கும் வகை கூறியது. சென்ற ஆண்டில் இவற்றின் தொடர்பான பங்குகள் முறையே 17சதவீதமாகவும், 15சதவீதமாகவும் விளங்கின.

கடந்த காலத்தைப் போன்று நேரில் வரியில் முக்கிய விடயமாக விளங்கிய ஏற்றுமதித் தீர்வைகள் ரூ. 36,850 இலட்சம் கொண்ட தேறிய மொத்த சேகரிப்பைக்கொண்டிருந்தன. எனினும், மொத்த அரசிறையில் இதன் சார்பு ரீதியான பங்கு சென்ற ஆண்டின் 26சதவீதத்திலிருந்து 23சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சி உற்பத்தியாளருக்குச் சாதகமான இலாப எல்லைகளை வழங்கும் பொருட்டு ஏற்றுமதித் தீர்வைகள் குறைக்கப்பட்டமையால் வளர்ச்சி வீதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு குறைவடைந்தமையாலும் சில குறிப்பிட்ட ஏனைய வகுப்பைச் சார்ந்த அரசிறையின் வளர்ச்சியில் உயர்ந்தளவு அதிகரிப்புக்காணப்,

பட்டமையாலும் ஏற்பட்டதாகும். தனித்தனியான அடிப்படையில் இறப்பர், தெங்கு என்பனவற்றிலிருந்து கிடைத்த ஏற்றுமதித் தீர்வைகள் முறையே 3 சதவீத 10சதவீத அதிகரிப்புகளைப் பதிவு செய்த அதே வேளையில் தேயிலையிலிருந்து கிடைத்த தீர்வைகள் 2சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தன. இறப்பரைப் பொறுத்த வரை கூடிச் செல்லும் அளவு முறை குறைக்கப்பட்ட போதிலும் முக்கியமாக ஏற்றுமதி அளவு அதிகரித்தமையினாலும் இலங்கை நாணயத்தில் (க. ஏ. பெ.) சிறிதளவு அதிகரிப்பு ஏற்பட்டமையினாலும் இந்த மேலதிக தீர்வை வரவுகள் பெறப்பட்டன. தெங்குப் பொருட்களிருந்து கிடைத்த தீர்வை வரவுகள்அதிகரித் தமைக்குப் பெருமளவிற்கு உயர்ந்த ஏற்றுமதி அளவும் ஓரளவுக்கு 1981நவெம்பர் 12 இலிருந்து வரிவிதிப்பில் நடை முறைப்படுத்தப்பட்ட செயல்பாட்டு மாற்றமும் காரணமாகும். அளவுக்கேற்ப குறிப்பிட்ட ஏற்றுமதித் தீர்வைக்குட்பட்ட தேயிலை யைப் பொறுத்தவரை இதில் ஏற்பட்ட வீழ்ச்சி தீர்வை வீதங்கள் குறைக்கப் பட்டமையால் ஏற்பட்டதாகும். சிறு ஏற்றுமதிப் பொருட்களிலிருந்து கிடைத்த தீர்வை வரவுகள் ரூ. 1,330 இலட்சமாக அமைந்து 18சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. இது சாதகமான ஏற்றுமதி விலைகள் காரணமாகவும் உயர்ந்த அளவான ஏற்றுமதியினாலும் ஏற்பட்டதாகும். எனினும், காரீயத்தைப் பொறுத்தவரையில் அதிகரித்த தீர்வைச் சேகரிப்புக்கள் முக்கியமாக உயர்ந்த க. ஏ. பெ. விலைகளால் ஏற்பட்டதாகும். இதன் ஏற்றுமதி அளவு 35 சதவீதம் வீழ்ச்சியடைந்த போதி லும் ஏற்றுமதிப் பெறுமதியில் 10 சதவீத அதிகரிப்புக் காணப்பட்டது.

வரி வருவாயில் இரண்டாவது முக்கிய விடயமான இறக்குமதித் தீர்வைகள் ரூ. 32,150 இலட்சம் கொண்ட மொத்த சேகரிப்புக்களைக் கொண்டிருந்ததுடன் 10 சதவீத அதிகரிப்பையும் பதிவு செய்தன. முந்திய ஆண்டின் வளர்ச்சி 29சதவீத மாகும். இறக்குமதிகள் மீதான செலவு 1980இன் 50சதவீதத்திலிருந்து 4சதவீதத் திற்கு குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தமையால் வளர்ச்சி வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியே இக்குறைந்த போக்குக்குக்காரணமாகும். மொத்த அரசிறையில் இறக்குமதித் தீர்வையின் பங்கு முந்திய ஆண்டின் 21 சதவீதத்திலி ருந்து 20 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. சராசரி இறக்குமதித்தீர்வை வீதம் 9சதவீதமாக மாற்றமுறாதிருந்தது. அரிசி, கோதுமைத் தானியம், மா, பெற்றோலி யம், வளமாக்கி போன்ற இறக்குமதிகள் நீங்கலான சராசரித் தீர்வை வீதமும் மாற்றமுறாது 14 சதவீதமாகவே விளங்கியது.

தேர்ந்த விற்பனவுகளின் வரிகளும் அரசிறையில் முக்கிய விடயமாக விளங்கி ரூ. 20,280 இலட்சம் கொண்ட மொத்த வரவினைக் கொண்டிருந்ததுடன் சென்ற ஆண்டின் 2 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் ரூ. 1,500 இலட்சம் அல்லது 8சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. எனினும் மொத்த அரசிறையில் அதன் பங்கு 13 சதவீதத்திலிருந்து 12சதவீதத்திற்கு சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது. புகையிலை வரிகள் ரூ. 11,230 இலட்சம் கொண்ட சேகரிப்புகளுக்கு வகைகூறியது டன் ரூ. 1,230 இலட்சம் அல்லது 12 சதவீதமான சிறிதளவு அதிகரிப்பைப் பதிவு செய்தன. இது முக்கியாக விற்பனை அளவு அதிகரித்தமையால் ஏற்பட்டதாகும். மது வகை மீதான தீர்வைகள் ரூ. 7,490 இலட்சமாக அமைந்து ரூ. 660 இலட்ச அல்லது 10சதவீத அதிகரிப்பைக் காட்டின. இது முக்கியமாகத் தீர்வை வீதங்கள் அதிகரிக்கப்பட்டமையால் ஏற்பட்டதாகும். தேயிலைப் பெறுமான விகித வரி யிலிருந்து கிடைத்த மொத்த வரவு ரூ.860 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டைவிட 16சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இது முக்கியமாக 1981 ஏப் பிறல் 1 தொடக்கம் வரிவிதிப்பிற்கு உட்படும் விலையின் மட்டம் 1 கிலோ கிராமுக்கு ரூ. 16 இலிருந்து ரூ. 18 இற்கு உயர்த்தப்பட்டமையால் ஏற்பட்ட

தாகும். தெங்கு உள்ளீட்டுப் பொருட்கள் மீதான நிருவாக வரியிலிருந்து பெற்ற சேகரிப்புக்கள் ரூ. 930 இலட்சத்திலிருந்து ரூ. 690 இலட்சத்துக்கு வீழ்ச்சியடைந்தன. இவ்வரி ஆண்டு முடிவின் போது மீளப்பெறப்பட்டது. இவ்வரியையும் தெங்கு உள்ளீட்டுப் பொருட்களின் மீதான குறிப்பிட்ட வரியையும் படிப்படியாக அதிகரித்துச் செல்லும் பெறுமான விகித வரியையும் மறுபதிலீடு செய்தது.

நேர் வரியிலிருந்து கிடைத்த வரவுகள் ரூ. 20,900 இலட்சமாக அமைந்து 2சதவீதமான சிறிதளவு வீழ்ச்சியைக் காட்டின. நேர் வரிகளின் முக்கிய கூறுக தனியார் கூட்டு வருமான வரிகள் விளங்கி மொத்த நேர்வரி அரசிறையில் 97 சதவீதமான அளவிற்கு வகை கூறின. எனினும் மொத்த அரசிறையில் நேர் வரிகளின் பங்கு 15சதவீதத்திலிருந்து 13 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

முன்னேற்றகரமான செயலாற்றத்தைக் கொண்டிருந்த வரியில்லாத அரசிறை ரூ. 20, 330 இலட்ச மொத்த வரவினைக் கொண்டதாய் 30சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இது எல்லாப் பகுப்பினையும் சார்ந்த வரியல்லாத அரசிறையில் ஏற்பட்ட பொதுவான அதிகரிப்பினால் ஏற்பட்டதாகும். வர்த்தக முயற்சிகளிலிருந்து கிடைத்த வரவுகள் முக்கியமாக அஞ்சல் தொலைத் தொடர்புப் பணிகள் தொடர்பான வீதங்களும் கட்டணங்களும் உயர்த்தப்பட்டதன் விளைவாக35சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தன. அரச கூட்டுத்தாபனத்துறை ஒன்றிணைந்த நிதியத்திற்கு அதிகரித்த தொகையை வழங்கியதுடன் பங்கிலாபங்கள், வட்டி, கடன் மீளக் கொடுப்பனவுகள் என்பனவற்றிலிருந்து கிடைத்த வரவுகள் ரூ. 4,120 இலட்சமாக அமைந்து ரூ. 600 இலட்ச அல்லது 17சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. மொத்த அரசிறையில் வரியில்லாத வருவாயின் பங்கு 1980 இன் 11 சதவீதத்திலிருந்து 1981 இல் 13 சதவீதத்திற்கு அதிகரித்தது.

வெளிநாட்டு வர்த்தகத்தினை அடிப்படையாகக் கொண்ட வரிகளிலிருந்து கிடைத்த அரசிறையானது இலங்கை ரூபாவின் அடிப்படை பெறுமதியில் ஏற்பட்ட மாற்றங்களின் மறைமுக விளைவாக 1978 இல் மிகக்கூடுதலாக அதிகரித்த போதிலும் ஏற்றுமதித் தீர்வைகளில் அடிக்கடி ஏற்பட்ட குறைப்புகள் காரணமாக வீழ்ச்சிப் போக்கினைக் கொண்டிருந்தது. அரசு அதற்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள அரசிறையிலிருந்து செலவினத்தை ஈடுசெய்ய முடியாதிருந்தமைக்கான காரணியாக இதனைக் கூறலாம். மொத்த அரசிறையில் நேரில் வரிகளின் சார்பு ரீதியான பங்கு 74இலிருந்து 75சதவீதத்திற்கு அதிகரித்தது. பெரும் பாகக் கூட்டுக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அரசிறையின் செயலாற்றத்தினை நோக்குகையில் சார்பு ரீதியான அதன் இசைந்து கொடுக்கும் தன்மையில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் காணப்பட்டது. முழு வாரியான அரசிறை வரி விகிதங்கள் சிறிதளவான வீழ்ச்சிகளைப் பதிவுசெய்தன. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நோக்குகையில் மொத்த அரசிறையும், வரிஅரசிறையும் முறையே சென்ற ஆண்டின் 21 சதவீதத்திற்கும் 19 சத வீதத்திற்கும் எதிராக இவ்வாண்டில் 19 சதவீதமாகவும் 17சத வீதமாகவும் விளங்கின. எனினும் பொருளாதாரத்தின் வழமையான பண வருவாயில் ஏற்படும் மாற்றத்திற்கேற்ப அரசிறையின் தன்மை சிறிதளவு முன்னேற்றத்தைக் காட்டியது. அரசிறை, வரி என்பவற்றில் இணைப்புக்குணகம் முறையே சென்ற ஆண்டின் 0.389, 0.449 என்பவற்றுக்கெதிராக நடைமுறை ஆண்டின் அரசிறை வரி இணைப்புக் குணகங்கள் 0.541 ஆகவும் 0.476 ஆகவும் விளங்கின. பொருளாதாரத்தின் அதிகரித்துச் செல்லும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கணிசமான பங்கு இன்னும் மரமல்லாத பயிர்த்துறையிலிருந்தே கிடைக்கின்றது. உயர்ந்த மட்டங்களிலான உற்பத்தியளவினைக்காட்டும் ஏனைய பலதுறைகளும் முதலீட்டைக் கவரும் பொருட்டு அவற்றுக்கு வழங்கப்பட்ட வரி விடுப்புக்களைத் தொடர்ந்தும் அனுபவித்தன.

**மீண்டெழும் செலவு**

முற்பணக் கணக்குகளின் தொழிற்பாடுகள் நீங்கலான மொத்த மீண்டெழும் செலவு ரூ. 158,870 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டின் 15 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 26, 380 இலட்சம் அல்லது 20சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. இதன் விளைவாக அரசின் மொத்தச் செலவில் மீண்டெழும் செலவின் பங்கு முந்திய ஆண்டின் 44 சதவீதத்திலிருந்து 51 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

மீண்டெழும் செலவில் ஆளணிக்கான ஊதியங்கள், ஓய்வூதியங்கள், பொதுப்படுகடன் மீதான வட்டி ஆகிய மூன்று முக்கிய விடயங்களும் முந்திய ஆண்டின் 19 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 30 சதவீதத்தால் அதிகரித்தன. இதன் விளைவாக மொத்தமீண்டெழும் செலவில் மூன்று விடயங்களினதும் பங்கு முந்திய ஆண்டின் 50 சதவீதத்திலிருந்து 54 சதவீதத்திற்கு அதிகரித்தது. ஆளணிக்கான ஊதியங்கள் ரூ. 36,530 இலட்சத்திலிருந்து ரூ. 39,920 இலட்சத்திற்கு அல்லது 9 சதவீதத்தாலும், ஓய்வூதியங்கள் ரூ. 7,180 இலட்சத்திலிருந்து ரூ. 9,040 இலட்சத்திற்கு அல்லது 26 சதவீதத்தாலும், பொதுப்படுகடன் மீதான வட்டி ரூ. 22,410 இலட்சத்திலிருந்து கணிசமான அளவால் ரூ. 37,380 இலட்சத்திற்கு அல்லது 67 சதவீதத்தாலும் அதிகரித்தன. முந்திய ஆண்டின் முறையே ரூ. 4,130 இலட்சத்துடனும் ரூ. 18,280 இலட்சத்துடனும் ஒப்பிடுகையில் வெளிநாட்டுப்படுகடன், உள்நாட்டுப்படுகடன் என்பன மீதான வட்டிகள் ரூ. 7,130 இலட்சமாகவும், ரூ. 30,250 இலட்சமாகவும் அமைந்தன. உள்நாட்டுப்படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 65 சதவீதத்தால் கணிசமானளவு அதிகரித்தமை 1980 இன் நடுப்பகுதியிலிருந்து ரூபாக்கடன்கள் மீதான வட்டி வீதம் 10 சதவீதத்திலிருந்து 16 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டமையாலும் திறைசேரி உண்டியல்களின் வட்டிவீதம் 9 சதவீதத்திலிருந்து 13 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டமையாலும் வெளிநின்ற திறைசேரி உண்டியல்களின் அளவில் ஏற்பட்ட அதிகரிப்பினாலும் ஏற்பட்டதாகும். 1980 இற்கும் 1981 இற்கும் இடையில் திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டிக்கொடுப்பனவுகள் ரூ. 4,410 இலட்சத்திலிருந்து ரூ. 13,060 இலட்சத்திற்கு ஏறக்குறைய மூன்று மடங்கு அதிகரிப்பினைப் பதிவு செய்தவேளையில் ரூபாக்கடன்கள் மீதான வட்டி ரூ. 13,300 இலட்சத்திலிருந்து ரூ. 16,940 இலட்சத்திற்கு 27 சதவீத அதிகரிப்பினைக் பதிவு செய்தன. பொதுப்படுகடன் மீதான மொத்த வட்டிக் கொடுப்பனவுகள் மொத்த மீண்டெழும் செலவில் சென்ற ஆண்டு 17 சதவீதப் பங்கினைப் கொண்டிருந்தமைக்கு எதிராக இவ்வாண்டில் 23 சதவீதமாக அமைந்தன. ஆளணிக்கான ஊதியத்தையும் ஓய்வூதியத்தையும் ஒன்றாக எடுத்து நோக்கின் அது 12 சதவீத அதிகரிப்பைக் காட்டியதுடன் மொத்த மீண்டெழும் செலவில் அவற்றின் பங்கு சென்ற ஆண்டின் 33 சதவீதத்திலிருந்து 31 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

இவ்வாண்டில் முக்கிய உதவு தொகைகளுக்கான மாற்றல்கள் சென்ற ஆண்டின் ரூ. 38,610 இலட்சத்திற்கெதிராக ரூ. 34,030 இலட்சமாக அமைந்தன. உணவு, மண்ணெண்ணெய் முத்திரைகள் மீதான செலவுகள் முறையே ரூ. 15,210 இலட்சமாகவும், ரூ. 1,640 இலட்சமாகவும் அமைந்தன. குழந்தைகளுக்கான பால் உணவு மீதான நுகர்வோர் உதவு தொகை ரூ. 820 இலட்சமாகவும், தேசிய பாற்சபைக்கு பால் உற்பத்தியாளர் சார்ந்த உதவுதொகையாக வழங்கப்பட்ட மாற்றல் ரூ. 440 இலட்சமாகவும் விளங்கின. தேயிலைத்தளிர் உற்பத்தியாளருக்கு ஊக்கமளிக்கும் பொருட்டு தேயிலைக்கு வழங்கப்படும் விலை உதவித்திட்டத்தின் கீழ் ரூ. 270 இலட்சம் செலவிடப்பட்டது. தேசிய சேமிப்பு வங்கிக்கான மொத்த

வட்டி உதவுதொகை ரூ. 3,880 இலட்சமாகும். இதில் ரூ. 2,620 இலட்சம் நடைமுறை ஆண்டுக்கும் மிகுதித்தொகை 1979 ஆம் நிதி ஆண்டுக்கும் உரியதாகும். பன்னுட்டு விலைகளில் அதிகரிப்புக்கள் ஏற்பட்ட போதிலும் வளமாக்கி உதவு தொகைக்கான மொத்தக் கொடுப்பனவு ரூ. 10,800 இலட்சமாக விளங்கி வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டுடன் ஓரளவு சமானமாக விளங்கியது. முக்கியமாக ஆடைகளின் ஏற்றுமதிகளை உள்ளடக்கிய இறக்குமதித்தீர்வை மீளளிப்புத்திட்டத்தின்கீழ் சென்ற ஆண்டின் ரூ. 3,480 இலட்சத்திற்கெதிராக ரூ. 3,910 இலட்சம் செலவிடப்பட்டது. நடைமுறை மாற்றல்களில் அரசுசார் நிறுவனங்களின் இழப்புக்களை ஈடுசெய்தல் தொடர்பான செலவுகளைப் பொறுத்தவரை சாதகமான அபிவிருத்தி காணப்படுகின்றது. இது சென்ற ஆண்டின் ரூ. 6,570 இலட்சத்திற்கெதிராக இவ்வாண்டில் ரூ. 1,070 இலட்சமாக அமைந்தது. சென்ற ஆண்டின் இலங்கை மத்திய போக்குவரத்துச் சபைக்கான ரூ. 4,570 இலட்சத்தையும் உள்ளடக்கும். இல்வாண்டில் முக்கியமான உதவுதொகையைப் பெற்றோர் கூ. மொ. வி. (ரூ. 760 இலட்சம்) தாள் கூட்டுத்தாபனம் (ரூ. 110 இலட்சம்) வளமாக்கிக் கூட்டுத்தாபனம் (ரூ. 100 இலட்சம்) என்பனவாகும்.

### முற்பணக் கணக்குகள்

முற்பணக்கணக்கின் வெளிநின்ற மொத்த பற்றுநிலுவை சென்ற ஆண்டின் ரூ. 78,960 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 96,190 இலட்சமாக விளங்கியது. இத்தகைய முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகள் மூல வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளில் எதிர்பார்க்கப்பட்ட ரூ. 6,750 இலட்சங்கொண்ட உள் வரவிற்கெதிராக ரூ. 17,230 இலட்சங்கொண்ட தேறிய வெளிக் கொடுப்பனவாக அமைந்தன. எனினும் சென்ற ஆண்டின் ரூ. 32,400 இலட்சங்கொண்ட தேறிய வெளிக் கொடுப்பனவுடன் ஒப்பிடுகையில் நடைமுறை ஆண்டின் செயலாற்றம் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தைக் காட்டியது. அரசதிணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் சென்ற ஆண்டின் ரூ. 30,910 இலட்சமாக அமைந்தமையுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் ரூ. 5,090 இலட்சத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டுக் கணிசமான அளவு வீழ்ச்சியடைந்தமையாலேயே சாதகமான இவ்வபிவிருத்தி ஏற்பட்டது. அரச திணைக்களங்களுக்கான முற்பணங்களில் முக்கிய கூறான உணவுக் கொள்வனவு, விநியோகக் கணக்கு சென்ற ஆண்டின் ரூ. 20,930 இலட்சங் கொண்ட தேறிய வெளிக் கொடுப்பனவுடன் ஒப்பிடுகையில் மிகக் கணிசமான அளவு குறைந்த தொகையான ரூ. 5,880 இலட்சத்தைக் கொண்டிருந்தது. இவ்வாண்டில் வழங்கப்படாத களஞ்சியங்களினதும் பொருட்களினதும் கணக்கு ரூ. 1,660 இலட்சங்கொண்ட தேறிய வெளிக் கொடுப்பனவைக் கொண்டிருந்தது. பல்வேறு மூலங்களிலிருந்தான உள்வருகையான ரூ. 740 இலட்சத்திற்கெதிராகக் காணப்பட்ட இலங்கை மத்திய போக்குவரத்துச்சபைக்கான ரூ. 2,000 இலட்சங்கொண்ட வெளிக்கொடுப்பனவுடன், முற்பணக் கணக்குகள் மேலதிக நிலுவைகள் என்பனவற்றிலிருந்து பெறப்பட்ட கடன்களின் தேறிய அளவு சென்ற ஆண்டின் ரூ. 1,950 இலட்சங்கொண்ட உள்வருகையுடன் ஒப்பிடுகையில் ரூ. 1,260 இலட்சமாக அமைந்தது. இலங்கை சீன வர்த்தகக் கணக்கின் வெளிநின்ற பற்று நிலுவை ரூ. 960 இலட்சத்திலிருந்து ரூ. 4,440 இலட்சத்திற்கு அதிகரித்ததினுல் இவ்வாண்டின் தேறிய வெளிக்கொடுப்பனவு ரூ. 3,490 இலட்சமாக அமைந்தது. மீளப்பெறப்படக்கூடிய மூலதனச் செலவுடன் தொடர்புடைய தேறிய முற்பணங்கள் ரூ. 5,740 இலட்சமாக அமைந்தன. முற்பணக் கணக்குகளின் தேறிய வெளிக் கொடுப்பனவாகிய ரூ. 17,230 இலட்சம் ஏற்பட்டிராவிடின் நடைமுறைக்கணக்கு மாத்திரம் ரூ. 3,410 இலட்சம் கொண்ட மிகையை ஏற்படுத்தியிருக்கும். எனினும் நடைமுறைச் செலவிலும் மொத்த அரசின் செலவிலும் அதன் பங்கு 1980இன் முறையே 24 சதவீதத்திலும் 11 சதவீதத்திலுமிருந்து 11 சதவீதத்திற்கும் 6 சத வீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தது.

மூலதனச் செலவு

கடன் கரைப்பு நிதியத்திற்கான உதவுதொகை, கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் என்பவற்றை உள்ளடக்கிய மொத்த மூலதன செலவு சென்றஆண்டின் ரூ. 138,540 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1981இல் ரூ. 134, 910 இலட்சமாக அமைந்தது. முந்திய ஆண்டின் 54 சதவீத அதிகரிப்பிற்குமாருக நோக்குகையில் 3 சதவீத வீழ்ச்சி காணப்படுகின்றது. மூலதனச் செலவினை, கிடைக்கத்தக்கதாகவுள்ள மூலவளத்தின் அளவிற்குள் மட்டுப்படுத்த வேண்டுமென்ற திட்டமிடப்பட்ட கொள்கைத் தீர்மானத்தின் விளைவாகவே இது ஏற்பட்டது. இதனுல் செயல்முறையிலுள்ளதும் முதன்மையானதுமான செயற்றிட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து எல்லா முதலீட்டுத்திட்டங்களும் மீள வரையப்பட்டன. மொ. உ. உற்பத்தியில் மூலதனச்செலவின் சதவீதப்பங்கு முந்திய ஆண்டின் 21இலிருந்து 1981இல் 16இற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்தக் கடன்கரைப்பு நிதிய உதவு தொகையும் கடன் தீர்ப்பனவுகளும் ரூ. 16,080 இலட்சமாக அமைந்தன.

கடன்கரைப்பு நிதிய உதவு தொகையும் கடன்தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளுக்கும் நீங்கலான உண்மையான மூலதனச் செலவின் துணை ஒதுக்குகளை உள்ளடக்கிய வரவு-செலவுத்திட்ட மதிப்பீடுகளுடன் தொடர்பாக நோக்குகையில் ரூ. 15,330 இலட்ச அல்லது 11 சதவீதக் குறைச் செலவினைக் காட்டியது. மொ. உ. உற்பத்திச் சுருக்கியினுல் சுருக்கப்பட்ட உண்மையான மூலதனச்செலவு, மெய்ரீதியிலான மூலதனச்செலவு 1981 இல் ரூ. 35,590 இலட்சமாக மட்டும் அமைந்து 1980 இன் ரூ. 43,610 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 18 சதவீத வீழ்ச்சியினைப் பதிவு செய்தமையைக் காட்டுகின்றது. செயல்முறையில் உள்ளதும் முதன்மை வாய்ந்ததுமான செயற் திட்டங்களுக்கு மட்டும் செலவினை மட்டுப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட ஒரு நிலையில் இது தவிர்க்க முடியாத அபிவிருத்தியாகும். மூலதனச் செலவின் அமைச்சுகளின் படியான பகுப்பு புள்ளிவிபரப் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது.

அரசதுறையின் மூலதனச் செலவு அரசுசார்துறைகளுக்கான முழுமையான மூலதன நன்கொடைகளிலிருந்து எழும் செலவு என்பவற்றுடன், வரவு-செலவுத் திட்ட அடிப்படையிலான மூலதனச் செலவு அரசுசார்துறையில் கடன்கள் மூலம் நிதியிடப்பட்ட முதலீட்டு நடவடிக்கைகளையும் உள்ளடக்கியிருந்தது. இது இவ் ஆண்டில் ரூ. 5,690 இலட்சமாக அமைந்தது. இதில் இலங்கை மின்சபைக்கு ரூ. 1,950 இலட்சம் வழங்கப்பட்டது. முதலீட்டுக்கடன் பெற்ற ஏனையோர் கலதாரி ஹோட்டல் (ரூ. 750 இலட்சம்) இறப்பர் அதிகாரசபை (ரூ. 740 இலட்சம் இ. ம. போ. ச (ரூ. 1,710 இலட்சம்) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி நிதியம் (450 இலட்சம்) என்பனவாகும்.

ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 37,500 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1981 இல் மகாவலித்திட்டத்தின் மீதான உண்மையான செலவு ரூ. 36,360 இலட்சமாக அமைந்து 3 சதவீதக் குறைச்செலவைப் பதிவுசெய்தது. 1ஆம் 2ஆம் 3ஆம் கட்டங்களுடன் தொடர்புடைய அபிவிருத்தி வேலைகள் மீதான மொத்தச்செலவு ரூ. 3,660 இலட்சமாகும். இதில் ரூ. 3,540 இலட்சம் 2ஆம் 3ஆம் கட்டங்கள் மீது செலவிடப்பட்டது. விரைவுபடுத்தப்பட்ட திட்டத்தின் மீதான மொத்தச்செலவு ரூ. 32,700 இலட்சமாகும். விரைவுபடுத்தப்பட்ட திட்டத்திற்கான நிதிச்செலவுகள் முறையே விக்டோரியா (ரூ. 9,690 இலட்சம்) கொத்மலை (ரூ. 9,740 இலட்சம்) மாதுருஓயா (ரூ. 6,430 இலட்சம்) மினிப்பே அணைக்கட்டும் வடிநில கால்வாயும் (ரூ. 3,350 இலட்சம்) நீர்ப்பாசன அமைப்பு ''இ'' (ரூ, 1800 இலட்சம்) நீர்ப்பாசன அமைப்பு ''ஆ'' (ரூ. 900 இலட்சம்) றன்டெனிகல (ரூ. 170 இலட்சம்) அமைப்பு முறை ''அ''வின் வாய்ப்புப்பற்றிய ஆய்வும் வடிநில மற்றும் ஆய்வும் (ரூ. 620 இலட்சம்) என்பவற்றில் ஏற்பட்டன.

உள்ளூராட்சி, வீடமைப்பு, நிர்மாண அமைச்சின் வீடமைப்புத்திட்டங்கள் அமைச்சிற்கான மொத்த வாக்கில் 40 சதவீதத்தினை வகித்தன. நகர வீடமைப் புத் திட்டத்தின் மீது ரூ. 6,050 இலட்சம் செலவிடப்பட்டவேளையில் தொகுதி வாரியான வீடமைப்புத்திட்டத்தில் ரூ. 1,830இலட்சம் செலவிடப்பட்டது. மாதிரிக் கிராமத்திட்டத்தினை உள்ளடக்கிய உதவி வழங்கப்பட்ட தன்முயற்சி வீடமைப் புத்திட்டத்திற்கான நிதிச்செலவு ரூ. 1,730 இலட்சமாகும். அரச ஊழியர்களுக் கான வதிவிடங்களை அமைத்தல், சேரிப்புறங்களை முன்னேற்றும் திட்டம் என்ப வற்றில் முறையே ரூ. 210 இலட்சமும் ரூ. 160 இலட்சமும் செலவிடப்பட்டது.

முக்கிய அமைச்சுகளினால் ஜயவர்தனபுர அமைப்புத்திட்டத்தின் மீது இவ் வாண்டில் ரூ. 5,870 இலட்சம் செலவிடப்பட்டது. கட்டடத்திணைக்களமும் நகர அபிவிருத்தி அதிகார சபையும் நாடாளுமன்ற அமைப்பு, நிருவாக அமைப்பு என்ப வற்றின்மீது முக்கிய கட்டுமான நடவடிக்கைகளுக்காக ரூ. 4,950 இலட்சத்தினைச் செலவிட்டன. மின் வழங்கலுக்காக இலங்கை மின் சபைக்கு ரூ. 520 இலட்சம் செலவிடப்பட்டவேளையில் தொலைத்தொடர்புப் பணிகள் தொடர்பாக ரூ. 380 இலட்சம் செலவிடப்பட்டது.

கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுமீது ரூ. 560 இலட்சங் கொண்ட வரவு-செலவுத்திட்ட ஒதுக்கு காணப்பட்டது. இத்தொகை முழுவதும் இவ்வாண்டில் செலவிடப்பட்டது. உள்ளமைப்பு வசதிகளை வழங்குவது தொடர் பாகவே முக்கிய செலவுகள் ஏற்பட்டன. ஒதுக்கில் ரூ. 350 இலட்சம் கட்டுநாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திலும் ரூ. 60 இலட்சம் பியகம முதலீட்டு ஊக்கு விப்பு வலயத்திலும் செலவிடப்பட்டது.

**வரவு-செலவுத்திட்டக் குறையை நிதியிடல்**

1981 இன் இறைத்தொழிற்பாடுகள் ரூ. 148,730 இலட்சங்கொண்ட வரவு-செலவுத்திட்டக்குறையை ஏற்படுத்தியதுடன், முந்திய ஆண்டின் குறையினைவிட 9 சதவீத வீழ்ச்சியினைக் காட்டின. மொ. உ. உற்பத்தியின் சதவீதமாக இக்குறை முந்திய ஆண்டின் 24 சதவீதத்திலிருந்து 17 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த அரசின் செலவில் வரவு-செலவுத்திட்டக்குறையின் சார்பு ரீதியான பங்கும் 54 சதவீதத்திலிருந்து 48 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. வரவு-செலவுத்திட்டக் குறை முழுவதும் மூலதனச் செலவின் பேரில் மட்டும் ஏற்படவில்லை. அது ரூ 13,820 இலட்சங்கொண்ட நடைமுறைச் செலவின் மீதான பொறுப்புக்களையும் உள்ளடக்கியிருந்தது. இதனால் முந்திய ஆண்டின் 15 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் குறையில் 9 சதவீதம் நடைமுறை நுகர்விற்கு நிதியீட்டியது.

குறையில் 56 சதவீதம் வெளிநாட்டு மூலங்களினால் நிதியிடப்பட மிகுதித் தொகை உள்நாட்டு மூலவளங்களைக் கொண்டிருந்தது. இது முந்திய ஆண்டின் முறையே 41 சதவீதத்துடனும் 59 சதவீதத்துடனும் ஒப்பிடத்தக்கது. செயற் திட்டக்கடன்களாகப் பெறப்பட்ட மொத்த வெளிநாட்டு நிதி ரூ. 20,640 இலட்ச மாக அமைய, பண்டக் கடன்கள் வடிவில் பெறப்பட்டவை ரூ. 17,220 இலட்ச மாக அமைந்தன. ''ஏனைய கடன்களின்'' கீழ்ப் பகுக்கப்பட்ட ரூ. 17,010 இலட் சங்கொண்ட தொகை முழுவதும் காசுக்கடன்களைக் கொண்டிருந்ததுடன், இதில் யூரோ—நாணய வர்த்தக கடன்களிலிருந்து சென்ற ஆண்டில் பெறப்பட்ட ரூ. 8,980 இலட்சத்திற்கெதிராக ரூ. 15,180 இலட்சமாக விளங்கியது. ரூ. 1,750 இலட்சம் பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பிடமிருந்து பெறப்பட்ட வேளையில் மீதியான ரூ. 80 இலட்சமும் ப. நா. நிதியத்திடமிருந்து நம்பிக்கை நிதியக்கடன்வடிவில் பெறப்பட்டது. பண்ட செயற்றிட்ட உதவி வடிவில் பெறப்

பட்ட நன்கொடைகள் ரூ. 28,030 இலட்சமாக அமைந்து மொத்த மூலவள இடையில் 19 சதவீதத்திற்கு நிதியிட்டு மொத்த வெளிநாட்டு நிதிகளில் மூன்றி லொரு பங்கினை வகித்தன. ரூ. 28,030 இலட்சங்கொண்ட நன்கொடைகள் வரவு செலவுத்திட்ட செலவிற்குப் பயன்படுத்தப்பட்டபோதிலும் இவ் ஆண்டில் பெறப் பட்டமொத்தத் தொகை ரூ. 31,180 இலட்சம் வரையில் விளங்கியது,

குறையை நிதியிடுவதற்கு உதவிய உள்நாட்டு மூலவளங்களைப் பொறுத்த வரை வங்கியல்லாச் சந்தைக் கடன்பாடுகளின் செயலாற்றம் எதிர்பார்த்ததை விடக் குறைவாக இருந்தது. வரவு-செலவுத்திட்ட மதிப்பீடாகிய ரூ. 37,500 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 23,790 இலட்சம் மட்டுமே பெறப்பட்டது. இது தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்புக்களைத் திரட்டும் வீதம் வீழ்ச்சியடைந்த மையாலும் ஓரளவிற்கு தேசிய சேமிப்பு வங்கியின் முதலீடுகள் பன்முகப்படுத் தப்பட்டமையாலும் அரச பிணைகளுக்கான தேசிய சேமிப்பு வங்கியின் உதவு தொகை அதிகளவு வீழ்ச்சியடைந்தமையாலும் ஏற்பட்டதாகும். 1980 வரையும் வரவு-செலவுத்திட்டக்குறையை நிதியிடுவதற்கு இம்மூலத்திலிருந்து பெறப்பட்ட நிதியத்தின் அளவு தொடர்ந்து அதிகரித்துச் சென்று 1981 இல் இது எதிர்காலத் திலும் இந்த உறுதியான வேகத்தில் பேணப்பட முடியாது என்பதற்கான குறிகளைக்காட்டின. முழுமையான நியதிகளில் ரூ. 24,240 இலட்சம் பெறப்பட்டது. எனினும் திறைசேரி உண்டியல்களின் மீளக்கொடுப்பனவாகிய ரூ. 430 இலட்சத் துடனும் வங்கியல்லாத்துறை வசமிருந்த வரி ஒதுக்குச் சான்றிதழ்களின் மீளக் கொடுப்பனவாகிய ரூ. 20 இலட்சத்துடனும் குறையை நிதியிடுவதற்குக் கிடைக் கத்தக்கதாயிருந்த மொத்த மூலவளம் ரூ. 23,790 இலட்சமாக அமைந்தது.

மொத்த வரவு-செலவுத்திட்டக்குறையில் சந்தையல்லாக் கடன்பாடு 2 சத வீதப் பங்கினை வகித்தது. மொத்த உள்நாட்டு நிதியிடலில் இதன் பங்கு 5 சத வீதமாக விளங்கியது. நிருவாகக் கடன்பாடுகளும், பல்வகை மூலவளங்களிலிருந்து பெறப்பட்ட சிறு அளவுகளிலான நிதியும் நீங்கலாக சந்தையல்லாக் கடன்பாட்டில் பெரும்பங்கு பல்வேறு வகையான வைப்புக்களிலிருந்து பெறப்பட்டது. சென்ற ஆண்டின் எதிர்க்கணிய உதவுதொகையான ரூ. 2,160 இலட்சத்திற்கெதிராக மீளாய் விற்குரிய ஆண்டில் இத்துறை ரூ. 3,260 இலட்சங்கொண்ட மொத்தத் தொகையை வழங்கியது.

மொத்த நியதிகளில் ரூ. 38,760 இலட்சங்கொண்ட தொகை திறைசேரி உண்டியல்களின் வழங்கல் மூலம் பெறப்பட்டதுடன். இதில் பெரும்பாலும் முழு வதனையும் மத்திய வங்கியே உதவியது. இது இரு அரச வங்கிகளினதும் பங்கு முதல்களை அதிகரிக்கும் அரசின் ஒரு பகுதித் தொழிற்பாடாக இவ்வாண்டில் அரசிற்குச் சொந்தமான இருவர்த்தக வங்கிகளும் ரூபாக்கடன்களுக்கு ரூ. 890 இலட்சம் பெறுமதியான தொகையை வழங்கின. எனினும் வழமையான வங்கி கள் புதிய ரூபாக் கடன் வழங்கல்களைப் பெறுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. தேறிய நியதிகளில் ரூ. 910 இலட்சம் கொண்ட வீழ்ச்சியினைக் காட்டும் மத்திய வங்கியின் வெளிநின்ற முற்பணங்களுடன் வரவுசெலவுத்திட்டக்குறையை நிதி யிடுவதில் மத்திய வங்கியின் தேறிய உதவுதொகைகள் ரூ. 38,280 இலட்சம் வரையில் அமைந்தது. வர்த்தக வங்கிகளின் மொத்த தொகைகள் ரூ. 890 இலட்சங்களாக விளங்கின. இதன்படி வரவு செலவுத்திட்டக்குறையை நிரப்பு வதற்கு கிடைக்கக் கூடியதாக இருந்த தேறிய வங்கி நிதியின் மொத்தத்தொகை ரூ. 39,170 இலட்சமாக அமைந்தது. ரூ. 380 இலட்சங்கொண்ட காசு நிலுவை களின் எடுப்பனவும் மீதியான குறையை நிதியிட உதவியது.

**பொதுப்படுகடன்**

*1981*இன் முடிவில் வெளிநின்ற மொத்தப் பொதுப்படுகடன் ரூ. *649.990* இலட்சமாக விளங்கிய முன்னைய ஆண்டின் *46* சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுமிடத்து *26* சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இவ்வாண்டில் மொத்த உள்நாட்டுப் படுகடன் *22* சத வீதத்தால் அதிகரிக்க வெளிநாட்டுப் படுகடன் *31* சத வீதத்தால் அதிகரித்தது. இதன்படி மொத்தப் பொதுப்படுகடனில் உள்நாட்டுக் கடன்களின் விகிதம் *1980*ஆம் ஆண்டின் *57* சதவீதத்திலிருந்து *1981*இல் *55* சத வீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. ஆண்டு முடிவில் வெளிநின்ற மொத்த உள்நாட்டுக்கடன் ரூ. *358,270* இலட்சமாகவும், வெளிநாட்டுக் கடன் ரூ. *291,720* இலட்சமாகவும் இருந்தது. பொதுப்படுகடனின் மீதான மொத்த வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. *37,160* இலட்சமாக இருந்து முந்திய ஆண்டிலும் *69* சதவீத பெருமளவு அதிகரிப்பைப் பதிவு செய்தது. இவ்வதிகரிப்பைப் பிரதிபலித்து மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு பொதுப்படுகடனின் வட்டிக் கொடுப்பனவுகள் விகிதம் *1980*இன் *3.3* சதவீதத்திலிருந்து *1981*இல் *4.4* சதவீதமாக அதிகரித்தது. வட்டிக் கொடுப்பனவுகள் கடன் தீர்ப்பனவு, கடன்கரைப்பு நிதிய உதவுதொகைகள் உட்பட மொத்தக் கடன்பணிக் கொடுப்பனவுகள் முந்திய ஆண்டின் ரூ. *37,020* இலட்சத்துடன் ஒப்பிடுமிடத்து ரூ. *53,240* இலட்சமாக இருந்தது, அதன்படி கடன் தீர்ப்பனவு வீதம் கடன் (தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் மொத்த அரச வருமானத்தின் ஒரு வீதமாக) *1980*இன் *26* சதவீதத்திலிருந்து *1981*இல் *33* சத வீதமாக அதிகரித்தது. வெளிக் கடன் தீர்ப்பனவு வீதம் [1] *12.4* சதவீதத்திலிருந்து *13.4* சதவீதமாக அதிகரிக்கையில் வெளிப்பொதுப்படுகடன் வீதம் *4.5* சதவீதத்திலிருந்து *5* சதவீதத்திற்கு அதிகரித்து ஒரு சிறிதளவான அதிகரிப்பைக் காட்டியது.


மொத்த உள்நாட்டுக் கடன் *1980*இன் ரூ. *293,790* இலட்சத்திலிருந்து *1981*இல் ரூ. *358, 270* இலட்சமாக அதிகரித்தது. நிதியிடப்பட்ட கடன் (பெரும்பாலும் ரூபா பிணைகளை உள்ளடக்கிய நீண்ட நடுத்தர தவணைக் கடன்) ரூ. *179,390* இலட்சத்திலிருந்து ரூ. *203, 600* இலட்சத்துக்கு அதிகரித்திருக்கையில் மிதக்கும் கடன் (திறைசேரி உண்டியல்கள், மத்திய வங்கி முற்பணங்கள், வரி ஒதுக்குச்சான்றிதழ்கள் முதலியன) ரூ. *114,400* இலட்சத்திலிருந்து ரூ. *154 670* இலட்சத்திற்கு அதிகரித்தது. இவ்விதமாக மொத்த உள்நாட்டுக் கடனில் மிதக்கும் கடனின் பங்கு முந்திய ஆண்டின் *39* சதவீத பங்குடன் ஒப்பிடுமிடத்து *43* சதவீதமாக நின்றது.

இவ்வாண்டுக் காலத்தில் ரூபா பிணைகளிலிருந்து உயர்த்தப்பட்ட மூலவளங்களின் மொத்த தொகை வரவு செலவுத் திட்ட மதிப்பீடாகிய ரூ. *37,500* இலட்சத்திற்கெதிராக ரூ. *25,120* இலட்சமாக இருந்தது. ஒப்புநோக்குகையில் *1979, 1980* ஆம் ஆண்டுக்களின் மொத்த வழங்கல்கள் முறையே ரூ. *29,500* இலட்சமாகவும், ரூ. *28,020* இலட்சமாகவும் இருந்தன, ரூபாப் பிணைகள் வழங்கலில் இக் குறைப்பு பல காரணங்களால் ஏற்பட்டது. திட்டமிடப்பட்ட செலவுகளிற்கு மேலாக ஏற்பட்ட கடன்பாடுகளிற்காக ரூ. *4,930* இலட்சம் அரசுசார் முகவர் நிலையங்களில் மூலவளங்களிலிருந்து ஏற்கனவே செலவிடப்பட்டது. அரச ஈட்டு முதலீட்டு வங்கி ரூ. *600* இலட்சம் பெறுமதியான தொகுதிக் கடன் முறிகளை வழங்குகையில் நகர அபிவிருத்தி மேலாண்மைச்சபை ரூ. *4 330* இலட்சம பெறுமதியான தொகுதிக்கடன் முறிகளை வழங்கியது. இத்தோடு சேர சேமிப்பு நிறுவனங்களும் மூலதனங்களின் மிக உயர்ந்த வருவாய்தரும் மூலங்களை தேடுவதன் மூலம் தமது முதலீட்டுப் பட்டியல்களை மாற்றியமைத்தன.

---

*1* இவ்வீதம் மத்திய அரச கடன், பன்னாட்டு நாணய நிதியம் அரச வழங்குநர் கொடு கடனிலிருந்து பெற்ற கடன்கள் என்பனவற்றை குறிக்கும்.


## உள்நாட்டுப் படுகடனின் உள்ளடக்கம்




இலங்கை மத்திய வங்கி

* கடன்கரைப்பு நிதியங்கள் நீங்கலான மொத்தப் பொதுப்படுகடனுக்கான 1981 எண்தொகைகள் தற்காலிகமானவை.

## பொதுப்படுகடனின் உள்ளடக்கம்




இலங்கை மத்திய வங்கி

* கடன்கழைப்பு நிதியங்கள் நீங்கலாக மொத்தப் பொதுப்படுகடனுக்கான 1981 என் தொகைகள் தற்காலிகமானவை.

கடந்த காலத்தில் ரூபாக்கடன்களின் முதன்மை உதவுநர்களில் ஒன்றாக இருந்த தேசிய சேமிப்பு வங்கி 1981இல் ரூ. 2,860 இலட்சத்தை மாத்திரம் வழங்கியது. இதற்கான இரண்டு காரணங்கள் அதனது முதலீட்டுப்பட்டியலில் ஒரு வழிமாற்றமும் திரட்டப்பட்ட சேமிப்புக்களின் மட்டத்திலேற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியுமாகும். வர்த்தக வங்கிகளுடனான குறுந்தவணை முதலீடுகளில் ரூ. 1,190 இலட்சம் தொடர்ந்து வைக்கப்பட்டிருக்கையில் தேசிய சேமிப்பு வங்கி நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபையின் தொகுதிக்கடன் முறிகளில் ரூ. 570 இலட்சத்தை முதலீடு செய்தது. மேலுமொரு ரூ. 740 இலட்சம் கொண்ட இரண்டாந்தர திறைசேரி உண்டியல்கள் சந்தையில் வழங்கப்பட்டது. தேசிய சேமிப்பு வங்கியினால் திரட்டப்பட்ட சேமிப்புக்கள் 1980இல் ரூ. 6,670 இலட்சமாக இருந்து, ரூ. 5, 180 இலட்சமாக 22 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இவ்வபிவிருத்திகளைத் தொடர்ந்து ரூபாய் பிணைகளிற்கு தேசிய சேமிப்பு வங்கியின் உதவுதொகை 1980இன் ரூ. 9,180இலட்சத்திலிருந்து 1981இல் ரூ. 2,860இலட்சமாக வீழ்ச்சியடைந்தது. ரூபாப்பிணைகளிற்கு கடந்த வருடத்தில் உதவிய ரூ. 1,360 இலட்சத்திற்கெதிராக ரூ. 40 இலட்சத்தை மாத்திரம் உதவியதன்மூலம் தனது உதவு தொகைகளை வெகுவாக குறைத்துக்கொண்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இன்னொருமூலமாகும். முறையே, ரூ. 10,210, 10,220 இலட்சத்தையும் கொண்டிருந்த கடன்கரைப்பு நிதியமும் ஊழியர் சேமநிதியமும் ரூபாப்பிணைகளில் முதன்மை உதவுநர்களாக இருந்தன, 1980இன் பங்குகளான முறையே 29, 32 சதவீதங்களுடன் ஒப்பிடுமிடத்து 1981இன் மொத்த வழங்கல்களிற்கு ஒவ்வொன்றும் 41சதவீத உதவுதொகையை அளித்தது. கடன்கரைப்பு நிதியத்திற்கு அரசின் உயர்ந்த மட்டத்திலான உதவுதொகைகள். ரூபாப் பிணைகளிற்கு இணைந்த மூலதன நிதியின் உதவுதொகைகளை அதிகரிக்கச் செய்கையில் 1980ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஊழியர் சேமநிதியின் அதிகரித்த உதவுதொகைகளிற்கு 1981 சனவரி 1ஆம் நாளிலிருந்து குறைந்த உதவுதொகை வீதத்தை மேல்நோக்கி மாற்றியமைத்த காரணமாக வெளிவந்த பெரிய மூலவள சேர்க்கையே பெரிதும் காரணமாகும். கடன்கரைப்பு நிதியத்திலிருந்தும் ஊழியர் சேமநிதி வசமிருந்த தொகுதிக்கடன் முறிகளிலிருந்தும் முறையே ரூ. 3,700 இலட்சம் ரூ. 660 இலட்சம் கொண்ட மூலவளங்கள் வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்படாத மேலதிக செலவுகளிற்கு திசை திருப்பப்பட்டபோதும் இம் முதன்மை மூலங்கள் 1981இல் ரூபாப் பிணைகளிற்கு தமது உதவு தொகைகளை முறையே 24 சதவீதம், 13 சதவீதத்தால் அதிகரித்தன, ஐந்து ஆண்டு இடைவெளிக்குப்பின் இலங்கை வங்கியும் மக்கள் வங்கியும் 1981இல் ரூபாப் பிணைச்சந்தையில் ரூ. 890 இலட்சம் உதவுதொகைகளுடன் நுழைந்தன. இது இருவங்கிகளினதும் மூலதனத்தை நோக்கி அரசு செய்த உயர்த்தப்பட்ட பங்கு மூலதன உதவுதொகைளுடன் தொடர்புபட்டது. இவ்வாண்டில் வழங்கப்பட்ட எல்லா ரூபாப் பிணைகளும் நடுத்தரகால பிணைகளாக 3 வருட முதிர்வுக் காலத்தையும் வருடத்திற்கு 16 சதவீத வட்டியையும் கொண்டிருந்தன. இவ்வாண்டுக் காலத்தில் ரூபாக் கடன்களின் மொத்த மீளக்கொடுப்பனவுகள் ரூ. 980 இலட்சமாக வரையறுக்கப்பட்டது.

இவ்வருடத்தின் திறைசேரி உண்டியல்கள் மீதான தேறிய கடன்கள் கடந்த வருட கடனான ரூ. 68,000 இலட்சத்துடன் ஒப்பிடுமிடத்து ரூ. 41,200 இலட்சமாக இருந்தது. இவ்வாண்டுக் காலத்தில் திறைசேரி உண்டியல்கள் மீதான எல்லை ரூ. 100,000 இலட்சத்தில் இருந்து ரூ. 180,000 இலட்சத்திற்கு அதிகரித்தது. 1981 திசெம்பர் முடிவில் வெளிநின்ற மொத்த திறைசேரி உண்டியல்களின் தொகை ரூ. 139,200 இலட்சமாகும் வங்கித் துறைகள் வசமிருந்த திறைசேரி உண்டியல்கள் 1980இன் ரூ.96.130இலட்சத்திலிருந்து 1980ல் ரூ.137,740இலட்சத்திற்கு அதிகரித்தது

இதில் மத்திய வங்கி வசமிருந்த தொகை ரூ. 137.610 இலட்சமாக விளங்கி ரூ. 41,560 இலட்ச அதிகரிப்பைப் பதிவு செய்தது. இவ்வாறு வங்கித்துறையினரின் வசமிருந்த திறைசேரி உண்டியல்களின் அநேகமாக முழுவதும் மத்திய வங்கியின் கைகளிலேயே இருந்தது. திறைசேரி உண்டியல்களின் மீதான வட்டிவீதம் ஆண்டிற்கு 13 சதவீதமாக மாறுது இருந்தது. மூன்று மாத வழங்கல்களோடு சேர 6 மாத திறைசேரி உண்டியல்கள் வழங்கப்பட்டதுடன் திறைசேரி உண்டியல்கள் சந்தையில் புதிய அபிவிருத்திகள் ஏற்பட்டன. மேலும் மத்திய வங்கி 1981இல் ஒரு இரண்டாந்தார உண்டியல் சந்தையை அபிவிருத்தி செய்வதற்கு ஒரு திட்டத்தை வகுத்தது.


1981இல் நாணய விதிச்சட்டத்தின் பிரிவு 89இன் கீழ் அரசிற்கான தற்காலிக முற்பணங்கள் 1980 இன் ரூ. 1,830 இலட்ச அதிகரிப்பிற்கெதிராக ரூ. 910 இலட்ச குறையைக் காட்டியது. ஆண்டு இறுதியில் ரூ. 15,360 இலட்சமாக இருந்த மத்திய வங்கியின் முற்பணங்களின் மீதான மொத்த வெளிநின்ற பொறுப்பு 1980இல் பன்னாட்டு நிறுவனங்களிற்கு உதவுதொகைகள் கொடுப்பனவிற்காக அரசிற்கு மத்திய வங்கி வழங்கிய சிறப்புக் கடன்தொகையாகிய ரூ. 3,080 இலட்சத்தையும் உள்ளடக்கியது. ஆண்டு முடிவில் வெளிநின்ற வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் ரூ. 110 இலட்சமாகி ரூ. 20 இலட்ச குறைவைப் பதிவு செய்தது.

1981 திசெம்பர் முடிவில் வெளிநின்ற மொத்த வெளிநாட்டுக்கடன் ரூ. 291, 720 இலட்சமாக இருந்து முந்திய ஆண்டின் 41 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுமிடத்து ரூ. 68,950 இலட்ச அல்லது 31 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இவ்வாண்டில் சில முக்கிய நாணயங்களிற்கெதிராக இலங்கை ரூபாவினது பெறுமானத் தேய்வு வெளிநின்ற பொறுப்புக்களை ரூ. 21, 620 இலட்சத்தால் அதிகரிக்கச் செய்தது. நன்கொடை வழங்குநர்கள் ரூ, 1,470 இலட்சம் பெறுமதியான கடன்களை பதிவழித்ததுடன் இதில் ரூ. 1,430 இலட்சம் செயற்றிட்டக் கடன்களாகவும் மிகுதி பண்டக் கடன்களாகவும் இருந்தன.

இவ்வாண்டுக்காலத்தில் செயற்றிட்ட, பண்ட, பண வடிவில் பெற்றதும் ஏனைய கடன்களுமாக, பெற்றுக்கொண்ட மொத்த வெளிநாட்டு கடன்கள் முந்திய ஆண்டின் ரூ. 41,160 இலட்சத்துடன் ஒப்பிடுமிடத்து ரூ. 54,860 இலட்சமாக இருந்தன. பண்டக் கடன்களில் தொகை ரூ. 17,220 இலட்சமாக இருக்கையில் செயற்றிட்டக் கடன்கள் ரூ. 20,640 இலட்சமாக இருந்ததுடன் மிகுதி ரூ. 17,010 இலட்சம் யூரோ நாணயக் கடன் ரூ. 15,180 இலட்சத்தையும் பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பினது கடன் ரூ. 1,750 இலட்சத்தையும் உள்ளடக்கிய ஏனைய கடன்களினையும் கொண்டிருந்தது. இவ்வாண்டுக் காலத்தில் வெளிநாட்டுக் கடன்களின் மீளக் கொடுப்பனவுகள் ரூ. 6,070 இலட்சமாக இருந்து இதில் ரூ. 3,840 இலட்சம் (63 சதவீதம்) பண்டக் கடன்களின் மீதும், ரூ. 1,690 இலட்சம் (28 சதவீதம்) செயற்றிட்டக் கடன்களின் மீதும் மிகுதி ரூ. 540 இலட்சம் ( 9 சதவீதம்) பணம் மற்றும் வேறுகடன்களின் மீதும் இருந்தன.

இவ்வாண்டுக் காலத்தில் செயற்றிட்டக் கடன்களின் முக்கிய மூலங்களாவன கனடா (ரூ. 5, 280 இலட்சம்) பன்னாட்டு அபிவிருத்தி நிறுவனம் (ரூ. 5,200 இலட்சம்) சீனா (ரூ. 3,310 இலட்சம்) ஆசிய அபிவிருத்தி வங்கி (ரூ. 1,910 இலட்சம்) ஐக்கிய அமெரிக்க நாடுகள் (ரூ. 1, 630 இலட்சம்) யப்பான் (ரூ. 1,090 இலட்சம்) வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் (ரூ. 680 இலட்சம்) குவைத்

# வெளிநாட்டுப் படுகடனின் உள்ளடக்கம்




இலங்கை மத்திய வங்கி

1978 இலிருந்து ஏனைய கடன்கள் ப.நா.நி. பொறுப்பாண்மை நிதியக்கடனையும் உள்ளடக்கும்.
1981 க்கான எண் தொகைகள் தற்காலிகமானவை.

(ரூ. 490 இலட்சம்) தென்மார்க்கு (ரூ, 370 இலட்சம்) சேர்மன் கூட்டாட்சிக் குடியரசு (ரூ. 300 இலட்சம்) என்பனவாகும். பண்டக் கடன்களின் முக்கிய கொடைவழங்குநர்கள் நெதர்லாந்து (ரூ. 5,520 இலட்சம்) ஐக்கிய அமெரிக்கநாடுகள் (ரூ. 4,060 இலட்சம்) பிரான்சு (ரூ. 3,530 இலட்சம்) யப்பான் (ரூ. 2,890 இலட்சம்) கனடா (ரூ. 830 இலட்சம்) என்பனவாகும்.

இவ்வாண்டுக் காலப்பகுதியில் அரசு 16 செயற்றிட்டக் கடன்களிற்கும், 7 பண்டக்கடன்களிற்கும், 2 பண மற்றும் ஏனைய கடன்களிற்கும் ஒப்பந்தம் செய்தது. இக்கடன்களின் பெறுமதி முந்திய ஆண்டின் ரூ. 87,140 இலட்சத்துடன் ஒப்பிடுமிடத்து ரூ. 144,950 இலட்சமாக இருந்தது. 1981 ஆம் ஆண்டின் இறுதியில் 1970 ஆம் ஆண்டிலிருந்து ஒப்பந்தம் செய்யப்பட்ட கடன்களின் மொத்தப் பயன்பாட்டு வீதம் 53 சதவீதமாக இருந்தது. 1980 இல் இவ்விகிதம் 56 சதவீதமாக அமைந்தது. செயற்றிட்டக்கடன்களின் பயன்படுத்துதல் மட்டம் 22 சதவீதமாக இருந்தது. எப்படியாயினும் ரூபாக் கடன்கள் முழுவதாக பயன்படுத்தப்பட்டவிடத்து பண்டக் கடன்கள் மிக உயர்ந்த 72 சதவீத பயன்படுத்துதல் வீதத்தைப் பதிவுசெய்தது.

பொதுப்படுகடனின் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 1981 இல் ரூ. 37,160 இலட்சமாக இருந்து முன்னைய ஆண்டிலும் பார்க்க ரூ. 15,160 இலட்சம் அல்லது 69 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தன. வெளிநாட்டுக் கடன்களின் மீது மிகுதியான ரூ. 7,150 இலட்சம் கொடுப்பனவு செய்யப்பட்டவிடத்து உள்நாட்டுக் கடன்களின் மீது ரூ. 30,030 இலட்சம் கொடுப்பனவு செய்யப்பட்டது. உள்நாட்டுக் கடன்களின் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 12,160 இலட்சம் அல்லது 68 சதவீதத்தால் அதிகரித்ததுடன் வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப் பனவுகள் ரூ. 3,000 இலட்சம் அல்லது 73 சதவீதத்தால் அதிகரித்தன. உள்நாட்டுக் கடன்களின் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூபாக் கடன்களின் மீதான ரூ. 16,940 இலட்சத்தினாலும் திறைசேரி உண்டியல்களின் மீதான ரூ. 13,060 இலட்சத்தினாலும் ஆக்கப்பட்டது. திறைசேரி உண்டியல்களின் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 8,650 இலட்சத்தால் அதிகரித்து இவ்வாண்டுக் காலப்பகுதி யில் மூன்றுமடங்கு அதிகரிப்பைப் பதிவு செய்தது. இதன்படி மொத்த உள்நாட்டுக் கடனில் திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டிக் கடப் பாடுகளின் பங்கு 1980இன் 25 சதவீதத்திலிருந்து 1981இல் 43 சதவீதமாக அதி கரித்தது. மொத்த உள்நாட்டுக் கடனில் ரூபாக் கடன்களின் விகிதம் 60 சத வீதத்திலிருந்து 56 சதவீதமாகக் குறைந்தவிடத்து ரூபாக் கடன்களின் மீதான வட்டிக்கொடுப்பனவுகள் ரூ. 3,640 இலட்சத்தால் அல்லது 27 சதவீதத்தால் அதி கரித்தது. வெளிநாட்டு நிருவாக கடன்களின் மீதான வட்டிக்கொடுப்பனவு 1980 இன் ரூ. 150 இலட்சத்திலிருந்து ஆய்வுக்குரிய ஆண்டில் ரூ. 30 இலட்சத்திற்குக் குறைவடைந்தது.